<u>இராணிப்பேட்டை நகராட்சி</u>

<u>2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் – 30 ஆம் நாள் வியாழன்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u>

<u>தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்</u>

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.04.2020 | <u>பொருள் எண்.120</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய ஆடு அறுக்கும் தொட்டியினை திரு.எஸ். கவாஸ்கர் என்பவருக்கு 2019–2020 ஆண்டுக்கு குத்தகையினை ஒப்படைக்கப்பட்டது. குத்தகைத் தொகை ரூ.637350/–வருமானவரி ரூ.6374/– மற்றும் தொழில்வரி ரூ.2500/– ஆக மொத்தம் ரூ.646224/–னை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.2970/2017/அ3 நாள் 26.02.2019, 19.03.2019, 30.04.2019, 14.05.2019, 08.07.2019, 22.10.2019,16.12.2019 மற்றும் 06.02.2020 ஆகிய அறிவிப்புகள் மூலம் குத்தகைத் தொகை, வருமான வரி மற்றும் தொழில்வரி செலுத்தக் கோரி தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொகை ரூ. 646224/–ல் ரூ.414820/–னை செலுத்தியுள்ளார். மீதம் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகை ரூ.222530/– வருமானவரி ரூ.6374/– மற்றும் தொழில்வரி ரூ.2500/– ஆக மொத்தம் ரூ.231404/–னை செலுத்தவில்லை. மேற்படி தொகை ரூ.231404/–னை செலுத்தாதினால் வருவாய் ஆய்வரின் 07.04.2020 தேதிய குறிப்பில் புதிய ஆடு தொட்டி குத்தகை உரிமையினை இரத்து செய்து துறை மூலம் வசூல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) திரு.எஸ்.கவாஸ்கர், புதிய ஆடு தொட்டி குத்தகைதாரர் உரிமையினை இரத்து செய்து துறை மூலம் வசூல் செய்ய அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் துறை மூலம் வசூல் செய்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>4) திரு.எஸ்.கவாஸ்கர் என்பவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து அதனால் ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் அன்னார் மீது வழக்கு தொடரவும் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2970 /2017/அ3)** | **நகர்மன்றத் தீர்மான எண். 120**<br>மன்றப்பொருள் ஒரு மாத காலம் குத்தகைத் தொகை நிலுவையினைச் செலுத்தும் பொருட்டு அனுமதி வழங்கப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| | | |
| 30.04.2020 | <u>பொருள் எண்.121</u><br>இந்நகராட்சியில் வருவாய் பிரிவிற்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவைகளின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான கேட்பு பதிவேடு மற்றும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான கேட்பு அறிவிப்புகள், வருவாய் உதவியாளர்களின் கையேடுகள் ஆகியவைகள் பிரிண்ட் எடுப்பதற்கு 12 A டோனர், Canon டோனர், A4 Size பேப்பர் அரசு கூட்டுறவு அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் அதற்கு தோராய செலவு ரூ.2,50,000/– செலவிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத் தொகை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1413 /2020/அ1)** | **நகர்மன்றத் தீர்மான எண். 121**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | <u>பொருள் எண்.122</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான கிருமிநாசினி, முககவசம், கையுறை, உபகரணங்கள், கருவிகள் மற்றும் இது தொடர்பான அனைத்து பொருட்களையும் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.3336/ஜே2/2020–13 நாள் 09.04.2020–ல் இந்நகராட்சிக்கு ஏற்கனவே பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் (SDRF) ரூ.4,00,000/– மற்றும் ரூ.20,00,000/– ஆக மொத்தம் ரூ.24,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மேற்படி கடிதத்தில் Tamilnadu Transparency in the Tender Act 1998 மற்றும் Tamilnadu Transparency in the Tender Rule 2000 & The Provisions of Section 9 & 10 of the said Act அத்தியாவசிய தேவைக்கு விலக்கு அளிக்கப்பட்டதின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் செலவினம் செய்தமைக்கும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1203 /2020/எச்1)** | **நகர்மன்றத் தீர்மான எண். 122**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | **<u>பொருள் எண்.123</u>**<br>இந்நகராட்சியில் இரவு காவலராகப் பணிபுரிந்த திரு.வெ.மோகனசுந்தரம் என்பவர் கடந்த 31.03.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதித் தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.வெ.மோகனசுந்தரம், இரவு காவலர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.1534/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.14494/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1437/2020/பி2)** | **நகர்மன்றத் தீர்மான எண்.123 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | **<u>பொருள் எண்.124</u>**<br>இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.பி.கோதண்டபாணி, என்பவர் கடந்த 31.03.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதித் தொகையை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். எனவே, திரு.பி.கோதண்டபாணி, துப்புரவுப் பணியாளர் அவர்களின் சிறப்பு சேமநலநிதித் தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டித் தொகையாகிய ரூ.11467/- மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தத் தொகையாகிய ரூ.24427/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1440/2020/பி2)** | **நகர்மன்றத் தீர்மான எண்.124 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | **<u>பொருள் எண்.125</u>**<br>இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்த திரு.எம் முனுசாமி, என்பவர் கடந்த 31.03.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.எம் முனுசாமி, துப்புரவு பணியாளர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.6690/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.16690/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1439/2020/பி2)** | **நகர்மன்றத் தீர்மான எண்.125 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | <u>பொருள் எண்.126</u><br>இந்நகராட்சியில் தண்ணீர் தொட்டி காவலராகப் பணிபுரிந்த திரு.மு.சேகரன், என்பவர் கடந்த 28.02.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.மு.சேகரன், தண்ணீர் தொட்டி காவலர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.1892/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.14852/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1438/2020/பி2)** | **நகர்மன்றத் தீர்மான எண்.126 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | <u>பொருள் எண்.127</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வண்டி மேட்டுத் தெரு மற்றும் நேரு நகர் காரை பகுதியில் இயங்கி வரும் ஆயுர்வேத மருத்துவமனைக்கு தேவையான மருந்துகள் அரசு நிறுவனமான இம்ப்காய்ஸ் அரும்பாக்கம், சென்னை அவர்களிடமிருந்து வாங்குவதற்காகும் செலவினம் தொகை ரூ.6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1415/2020/எச்1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.127 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | <u>பொருள் எண்.128</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23 வண்டி மேட்டுத் தெருவில் உள்ள பழைய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மூலம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு மேற்படி கட்டடத்தில் அமைந்துள்ள கழிவறை பகுதியினை அகற்றவும் பழுதுகள் நீக்கவும் பராமரிப்புப் பணிகள் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.1,05,000/–திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.1.05இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1474/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.128 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | <u>பொருள் எண்.129</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளுக்கும் குடிநீர் சப்ளை செய்யும் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரின் உள் பகுதியில் அமைந்துள்ள அனைத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றும் பிரதான பைப் லைன்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் லீக்கேஜ் ஆகியவற்றை சரி செய்யும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு பணி செய்யவும் அதற்காகும் செலவினம் தொகை ரூ.1,00,000/–திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.1.00 (ஒரு இலட்சம் மட்டும்) இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **நகர்மன்றத் தீர்மான எண்.129**<br>**மன்றப்பொருள்**<br>**அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | <u>பொருள் எண்.130</u><br>இந்நகராட்சி சந்தை மேடு பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் அரசு உத்தரவின்படி, காலை சிற்றுண்டியும் மதிய உணவும் தயார் செய்து ஏழை எளியோர் பயனடையும் வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது உலகம் முழுவதும் கொரோன வைரஸ் தொற்று நோய் பரவல் காரணமாக நமது இந்திய தேசம் முழுவதும் 25.03.2020 முதல் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே, தற்போது உள்ள சூழ்நிலையில் ஏழை எளியோர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அம்மா உணவகத்தில் மேற்படி தொற்று நோய் முற்றிலும் ஒழிக்கப்படும் வரை மூன்று வேளையும் உணவு தயார்செய்து விநியோகிக்க ஏதுவாக தேவையான சமையல் பாத்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், மின் சாதனங்கள் புதியதாக வாங்கி பயன்படுத்தவும் அம்மா உணவக கட்டடத்தில் மராமத்து (ம) பராமரிப்பு பணிகள் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.6.70இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | **நகர்மன்றத் தீர்மான எண்.130**<br>**மன்றப்பொருள்**<br>**அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | 3) மேற்படி பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.6.70 இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3198/2019/இ1)** | |
| 30.04.2020 | <u>பொருள் எண்.131</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாப்பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் (Covid-19) தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான கிருமிநாசினி, முககவசம், கையுறை, உபகரணங்கள், ஹைபோகுளோரைடு, நீர்த்த சுண்ணாம்பு, ஆட்டோ மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கவும், எழுதுபொருட்கள் மற்றும் கருவிகள் இது தொடர்பான அனைத்து பொருட்களையும் வாங்கிக் கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3336/ஜே2/2020–14 நாள் 23.04.2020–இல் பேரிடர் மேலாண்மை (SDRF) திட்டத்தின் கீழ் மூன்றாம் தவணையாக ரூ.10,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) 1939 ஆம் ஆண்டு பொதுசுகாதாரச் சட்டப்பிரிவு II–இல் VII மற்றும் பிரிவு 62 மற்றும் 1920 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 53 (1–ன்கீழ்) வாங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள Tamilnadu Transparency in the Tender Act 1998 மற்றும் Tamilnadu Transparency in the Tender Rule 2000 & The Provisions of Section 9 & 10 of the said Act அத்தியாவசிய தேவைக்கு விலக்கு அளிக்கப்பட்டதின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் செலவினம் செய்தமைக்கும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4) பொதுமக்கள் பயன்படுத்தும் முககவசம் மற்றும் கையுறைகளை நகராட்சியிலிருந்து பெற்றுக்கொண்டு அப்புறப்படுத்தி பாதுகாப்பாக அழிப்பதற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட Ken Bil Links Pvt Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ. 20,000/– வீதம் 17.04.2020 முதல் வழங்கவும் மன்றம்அனுமதி அளிக்கலாம்.<br>5) மேற்படி செலவினத் தொகை கொரோனாவைரஸ் தடுப்பு பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1203 /2020/எச்1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.131 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 30.04.2020 | <br>**<u>பொருள் எண்.132</u>**<br>அரசாணை நிலை எண். 141 நகராட்சி நிர்வாகம் மற்றும் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 23.04.2020—ல் கொரோனா நோய் தொற்று (COVID-19) காரணமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர்க் கட்டணம் போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள அரசாணை எண். (G.O (D) No.141, நாள் 23.04.2020) மன்றத்தின் பதிவிற்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்<br>**(ந.க.எண்.1469/2020/அ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.132 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | **<u>பொருள் எண்.133</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2—இல் அமைந்துள்ள காரை கூட்ரோடு சிமெண்ட் சாலையில் பொதுமக்களின் போக்குவரத்திற்கான பாதுகாப்பு கருதி நிரந்தரமாக வேகத்தடை அமைக்கவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.55,000/—த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.55,000/— இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1473/2020/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.133 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 30.04.2020 | **<u>பொருள் எண்.134</u>**<br>இந்நகராட்சி வார்டு எண். 11 —ல் அமைந்துள்ள பிஞ்சி வடக்குத் தெருவில் உள்ள பழைய சிறுபாலம் மற்றும் வடிகால்வாய் சேதமடைந்திருப்பதால் அவற்றை அகற்றி புதியதாக கான்கீரிட்டினாலான சிறுபாலம் மற்றும் வடிகால்வாய் அமைத்திடும் பணி செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ.2.20 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம். | **நகர்மன்றத் தீர்மான எண்.134 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.2.20 இலட்சம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1445/2020/இ1)**

30.04.2020

**பொருள் எண்.135**

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP - 2019–2020) கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 27, பிஞ்சி எல்.எப். ரோடு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல், வார்டு எண். 10 சீனிவாசன்பேட்டை சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல், வார்டு எண். 21, முன்சீப் கோர்ட் ரோடு பின்புறப்பகுதியில் தார் சாலை அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண். 3229 நாள் 14.08.2019–ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 12.11.2019 ஆம் தேதி அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.எஸ். எழில்வாணன், ஒப்பந்ததாரர்<br>1/95, பஜார் தெரு, லாலாபேட்டை, வாலாஜாதாலுக்கா. | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.என்.கே. வாசுதேவன், ஒப்பந்ததாரர்,<br>பாரதிநகர், இராணிப்பேட்டை. | 2.92% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்க தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 1945/2019/இ1)**

**நகர்மன்றத் தீர்மான எண்.135**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

xxxஒம்./ ச. செல்வபாலாஜி,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி.